செய்தி வெளியீடு எண்: 23 நாள்: 14.06.2019.

***தேனி மாவட்டம்***
***மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின்***
***பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித்திட்டத்தின் (PM KISAN) கீழ்***
***நிதியுதவி பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

**********

தேனி மாவட்டத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித் திட்டம் (PM KISAN) கடந்த 24.02.2019 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 2 ஹெக்டேர் வரை நிலம் வைத்திருந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.6,000/- நிதி உதவி அனுமதிக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ரூ.2,000/- வீதம் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசால் இத்திட்டம் தற்போது நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, உயர் வருவாய் பிரிவினர், நிறுவனத்தின் பெயரில் நிலம் உள்ளவர்கள் உள்ளிட்ட விலக்களிக்கப்பட்ட பிரிவினரைத் தவிர, தகுதியுள்ள அனைத்து விவசாயிகளும் கிராம நிர்வாக அலுவலரிடம் விண்ணப்பம் அளித்து இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வாரிசு அடிப்படையில் பட்டா மாறுதல் செய்து கொள்ளும் வாரிசுதாரர்களும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். நிலமானது 01.02.2019-க்கு முன் காலமான தனது தாய் அல்லது தந்தை பெயரில் இருந்தால், வாரிசுதாரர் வாரிசு சான்று மற்றும் இதர ஆவணங்களுடன் வட்டாட்சியர் அலுவலகத்தில் Online முறையில் விண்ணப்பம் அளித்து 30.06.2019-க்குள் பட்டா மாறுதல் செய்து அதன் அடிப்படையில் பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித் திட்டத்தின் கீழ் விவசாயிகள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி மாவட்டம்.**